செய்தி வெளியீடு எண்– 1026 நாள்–21.11.2010

# ரூ.4.16 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 168 குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளை குடிசைப்பகுதி மக்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

* * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (21.11.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.4.16 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்ட 168 குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை குடிசைப்பகுதி மக்களுக்கு வழங்கினார்.

சென்னை–பெரம்பூர் பேரக்ஸ் திட்டப்பகுதியில் 120 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.309.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் தரைதளம் மற்றும் 3 அடுக்கு மேம்பாட்டில் ஒரு பல்நோக்கு அறை, சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பிற்குமான கட்டுமான செலவு ரூ.2.58 இலட்சம் ஆகும். இவற்றில் முதற் கட்டமாக 85 சலவை தொழிலாளர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒதுக்கீட்டு ஆணைகளை இன்று வழங்கினார்.

மேலும், பெரம்பூர்–கௌதமபுரம் திட்டப்பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட 48 அடுக்குமாடி குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்ததால் அக்குடியிருப்புகளை இடித்து விட்டு புதிதாக 48 குடியிருப்புகள் ரூ.107.00 இலட்சம் செலவில் தமிழக அரசரால் கட்டப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் தரைதளம் மற்றும் 3 அடுக்கு மேம்பாட்டில் ஒரு பல்நோக்கு அறை, சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பிற்குமான கட்டுமான செலவு ரூ.2.23 இலட்சம் ஆகும். இக்குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை, இத்திட்டப்பகுதி குடியிருப்புகள் இடிப்பதற்கு முன்பு இங்கு வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாடுத் துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், சட்ட மன்ற உறுப்பினர் திரு.வி.எஸ்.பாபு, வீட்டுவசதித்துறை செயலாளர் திரு.அசோக் டோங்ரே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குனர் திரு.இராமலிங்கம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.